# பனித்துளி செய்திகள்!

“அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!” (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)




04.11.2024

## 45. நம்மை ‘நல்லவனாய் மாற்ற’ கிறிஸ்து வகுத்த வழி!

கிறிஸ்தவ விசுவாசிகள்கூட, உலகத்திலுள்ள பொதுவான பக்தி மார்க்க போதனைகளைத்தான் கைக்கொள்ளப் பார்க்கிறார்கள். அவர்களின் போதனை என்னவெனில் “நீங்கள் நல்ல மனுஷனாய் மாற, நல்ல கிரியைகளை செய்யுங்கள்” என்பது தான். இது எப்படியெனில், ஒரு கசப்பான மரத்தைப் பார்த்து “நீ தொடர்ந்து நல்ல கனி கொடுத்தால், கசந்த மரம் ஒழிந்து, நல்ல மரமாய் மாறிவிடலாம்!” எனக் கூறுவதற்கு ஒப்பாய் இருக்கிறது.

“இது சாத்தியமில்லை” என்பது உங்களுக்கே தெரியும்! பின்பு ஏன் நீங்கள் தொடர்ந்து நல்லது செய்து விட்டால், நல்லவனாய் மாறிவிடலாம் என அஞ்ஞானிகளைப்போல் எண்ணிக் கொண்டீர்கள்? அந்த கெட்ட மரமே ஒழிய வேண்டும்! இதைத் தவிர வேறு வழியில்லை.

நான் சிலுவையில் அறையப்பட்டேன்! இனி நான் அல்ல! என்னில் பிழைத்திருப்பது கிறிஸ்து மாத்திரமே! என்ற சத்திய தொனி, கலாத்தியர்2:20- ம் வசனத்தில் தொனிப்பதை, கவனித்து வாழுங்கள்!

– ரத்னம்